**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

“உமது பேரன்பிற்கேற்ப என்னை நினைத்தருளும்; ஏனெனில் ஆண்டவரே நீரே நல்லவர்”

(Ps 25, 7)

பின்னர் விண்ணகத்திற்கு எழுந்தருளும் முன்: “நீர் என்னிடம் சொன்னவற்றையே நான் அவர்களிடமும் சொன்னேன். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டு நான் உம்மிடமிருந்து வந்தேன் என்பதை உண்மையில் அறிந்து கொண்டார்கள்”. எக்காலத்திலும் எவரும் அழிவுற மாட்டார் என்று ஏற்பாடு செய்யப்படுகிறது. புதிய ஆதாம் இயேசுவில் நம்பிக்கை கொள்வோருடன் புதிய ஏற்பாட்டை கடவுள் செய்து கொள்கிறார்.

எல்லாக் காலத்திலும் கடவுள் தமது வாக்குறுதியை நிறைவேற்றி வந்திருக்கிறார். நோவா காலத்தில் நிகழ்ந்த பெரும் வெள்ளத்திற்குப் பின் உலகத்தைச் சீரமைத்த கடவுள், இனி வெள்ளம் உலகத்தை ஆட்கொள்ளாது என இறைவன் வாக்குறுதி அளித்தார். ஆனால் உலகம் குழப்பமானது, மக்கள் இறை நம்பிக்கையில்லாமல் தான்தோன்றித்தனமாக நடக்கலாயினர். தமது வாக்குறுதியின் அடையாளமாக நோவா மற்றும் அவரது குடும்பத்தின் முன்னிலையில் வானத்தில் வானவில்லை ஏற்படுத்தினார், இறைவன். நற்செய்தியில், கடவுளின் மற்றொரு வாக்குறுதி நிறைவேறுவதைக் காண்கிறோம். கடவுளுக்கும் படைப்புக்கும் இடையிலான உயிருள்ள உடன்பாடாக இறைமகன் இயேசு, நடுவரானார். அவரே, கடவுள் அன்பின் முழு வெளிப்பாடு, தூயப் பலிப்பொருள். கிறிஸ்துவில் மட்டுமே, கடவுளோடு நிலை வாழ்வு பெறும் வாய்ப்பை நாம் பெற்றுள்ளோம்.

நமது வாழ்க்கையையும் உலக நிலையையும் எண்ணிப் பார்க்கும் போது நம்மோடு கடவுள் செய்து கொண்ட உடன்பாட்டை நாம் மதிக்க வேண்டும். நாம் மனம் மாறி நம்பிக்கை கொள்ள வேண்டும் என்ற செய்தி மாறாது. எல்லாரின் நன்மைக்காக பணிபுரிந்து நல்லது செய்ய இந்த நம்பிக்கை வலியுறுத்துகிறது. நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்கு நமது அன்பைக் காட்டுவதற்கு பல்வேறு வழிகள் உள்ளன. இது, தவக்காலத்தில் தொடங்கி முடிவதில்லை. இது வாழ்க்கைப் பயணம். இயேசுவை அறிந்து கொண்டால், அன்பிற்கும் தியாகத்திற்கும், மனமாறுதலுக்கும், இரக்கத்திற்கும், நன்மைத்தனத்திற்கும் நமது வாழ்க்கையாக இருக்க வேண்டும். இயேசுவில் நமது மீட்பு உறுதி என்ற உண்மையை திருப்பாடல் (25:10) நிரூபிக்கிறது, “ஆண்டவருடைய உடன்படிக்கையையும் ஒழுங்குமுறையையும் கடைப்பிடிப்போர்க்கு, அவருடைய பாதைகளெல்லாம் பேரன்பும் உண்மையும் உள்ளனவாய் விளங்கும்”.

**இன்றைய வாசகங்கள்:**

தொநூ. 9, 8-15;
திபா. 24, 4-9.
1பேதுரு 3, 18-22.
மாற்கு 1, 12-15.

INTERNAL CIRCULATION ONLY
BUL 08/2021
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

21 பிப்ரவரி 2021

Newbec
NEW WAY OF BEING CHURCH
தவக்காலம் 1ம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்: **வேற்றுமையில் ஒற்றுமை**

# மனம் மாறி நம்புங்கள்

தவக்காலத்தின் தொடக்கத்திலேயே “மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்” என இயேசு நம் அனைவரையும் கேட்டுக் கொள்வது மிகப்பொருத்தமாக உள்ளது. 40 நாள் நோன்பும் மன்றாட்டையும் முடித்துக் கொண்டு, முழு இறை விவேகத்துடன் திருப்பணியைத் தொடங்க வருகிறார். தன்னையே அன்புப் பலியாக மாற்றி, அனைவரையும் தந்தையிடம் ஈர்க்கும் பணி இயேசுவிடம் வழங்கப்பட்டுள்ளது.

